16—

உயர்நிலைப்பள்ளிகளுக்கு விடுதி ஏற்படுத்துதல்

*33375—**டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன் :**

மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, நெருப்பூர் மற்றும் ஏரியூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கான பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, நெருப்பூர் மற்றும் ஏரியூரில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய மாவட்டம். இன்றைக்குப் பல்வேறு துறைகளிலே பல முன்னேற்றங்களை பெற்று வந்திருக்கிற மாவட்டம். இந்த மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய என்னுடைய தொகுதியில் உள்ள ஏரியூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் 1400 மாணவர்களும், நெருப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 1200 மாணவர்களும்; அதற்கு அருகில் உள்ள செல்லமுடி அரசு உயர்நிலைப் பள்ளியில் 600 மாணவர்களும்; ஆக 3 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்களைக் கொண்ட இந்தப் பகுதியில் ஒரு மாணவர் விடுதி அமைத்தால்-அங்குள்ள மிகவும் பின்தங்கியப் பகுதியாக உள்ள இந்த ஏரியூர் மையப் பகுதியில் அது அமைக்கப்படுமானால்-அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு மிகவும் சிறப்பாக அமையும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனைச் செய்து வருகின்ற ஆண்டிலாவது இந்தப் பகுதிக்கு ஒரு மாணவர் விடுதி அமைத்துக் கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

1995 நவம்பர் 3]

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்னாகரம் தொகுதியில் மிகப்பிற்படுத்தப்பட்ட நலத்துறை சார்பாக மாணவர் விடுதி ஒன்று இருக்கிறது. இன்று பொதுவாகவே மாணவியர்களுக்கு மட்டுமே புதிய விடுதி துவங்க வேண்டும் என்று அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்திருக்கிற காரணத்தால் மாணவியர்களுக்கு மட்டுமே விடுதி நிறுவுகின்ற சூழ்நிலையில் மாணவர்களுக்கு என புதிய ஒரு விடுதி துவங்குகிற சாத்தியக்கூறு ஏதும் இல்லை.

டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்னாகரம் பகுதிக்கும் இந்தப் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 30 கிலோ மீட்டர் ஆகும். வருகின்ற காலத்தில் அரசின் கொள்கைப்படி குறைந்தபட்சம் மாணவியர் விடுதியையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறப்பதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்னாகரம் தொகுதியில் 4 மாதங்களுக்கு முன்னதாகத்தான் ஒரு மாணவியர் விடுதி திறக்கப்பட்டது. எதிர்காலங்களில் தேவைக்கேற்ப இதுகுறித்து அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 17, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

17—

மாறாந்தை உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்

14983*—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் ஒன்றியம், மாறாந்தை உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதலாக கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS